கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 16-05-2023**

**ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-05-16 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-05-17 | 2023-05-18 | 2023-05-19 | 2023-05-20 | 2023-05-21 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 3.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 36.0 | 36.0 | 37.0 | 38.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 29.0 | 29.0 | 30.0 | 30.0 | 30.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 14 | 12 | 12 | 12 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 180 | 200 | 200 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 1 | 3 | 2 | 2 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் 20 ஆம் தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேக மூட்டத்துடன் காணப்படும். அதிக பட்ச வெப்பநிலை ஆனது 35-38 செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்பநிலை ஆனது 29-30 செல்சியஸ் ஆக பதிவாகலாம். மணிக்கு 8 முதல் 14 கி.மீ வேகத்தில் காற்று தென் திசையில் இருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

பருத்தியில் நுண்ணூட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய பருத்தி பிளஸ்யை இலைவழியாக தெளிக்கவும்

## குறுஞ்செய்தி :

| |
|---|
| தமிழ்நாட்டில் மே 21 முதல் மே 27 வரை மழை, அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பருத்தி | தற்பொழுது நிலவிவரும் வறண்ட வானிலை மற்றும் அதிகமான பகல் நேர வெப்பநிலை மிளகாயில் இலைப்பேன் தாக்குதலுக்கு சாதகமாக உள்ளது. இலைப்பேன்கள் இலைகளுக்கு கீழே இருந்து கொண்டு இலைகளை சுரண்டி அதிலிருந்து வெளிவரும் சாற்றினை உறிஞ்சுகின்றன. பாதிக்கப்பட்ட இலைகளானது சுருங்கியும், மேல் நோக்கி சுருண்டும் காணப்படும். பாதிக்கப்பட்ட இலை, பூ மற்றும் மொட்டுகள் காய்ந்து பின்னர் உதிர்ந்து விடும். இதனால் காய்களின் எண்ணிக்கை குறைபாடும் மகசூல் இழப்பும் ஏற்படும். இதனை கட்டுப்படுத்த, பிப்ரோனில் 5 SC @ 300 மி.லி அல்லது இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 60 மி.லி அல்லது ஸ்பைனட்டோரம் 11.7 SC @ 200 மி.லி மருந்தினை 200 லிட்டர் நீரில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தஞ்சாவூர் வாடல் நோய் வர ஏதுவாக உள்ளது. நோயின் ஆரம்பநிலை அறிகுறிகள் வாடல், ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் அதைத் தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிறசாறு கசிந்து திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும். இதனை கட்டுப்படுத்த 2 மில்லி ஹெக்சகோனசோல் உடன் 100 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை) செலுத்தலாம். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | நிலவும் வானிலையால் கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல் நோய்ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோயின் அறிகுறிகள் கோழிகள் தலையை ஒரு பக்கமாக சாய்த்து கொள்ளுதல், கழிச்சல் மற்றும் முட்டைகளின் எண்ணிக்கை குறைந்து இறப்பு ஏற்படும். இதனை தவிர்க்க கோழிகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவரைஅணுகி தடுப்பூசி போடவும். |